# திறவுகோல்

தை 2049 / மாத இதழ்

## தமிழினத்தின் தொன்மை

## மீனவர்களைக் காக்க தவறிய கப்பற்படை

## தண்ணீல கண்டம்

## மாடு மேய்க்க போவோம்

## மன வாக்‘‘கேசரி’’

## வாசிங்டன் சுந்தர் பயணம்



வெளியீடு

**மன்னையின் மைந்தர்கள் குழு**

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# தமிழினத்தின் தொன்மை

தமிழர்களின் தொன்மை, தனித்தன்மை அனைத்தையும் சீர்குலைக்க ஆரியத்தின் அடிமை இனமாக தமிழர்களைக் காட்ட, ஆரியப் பார்ப்பனியம் பல சூழ்ச்சிகள் செய்கிறது. அதில் ஒன்று, நாரதர் பெண்ணாக மாறி கிருட்டிணனுடன் வாழ்ந்து 60 ஆண்டுகளில் 60 மகன்களை பெற்றார் என்றும் கதை கட்டினார்கள்.

இப்படி சமசுகிருத பெயர்களை தாங்கி, புராணப் புனைவுகளின் ஆபாசங்களில் வேர்கொண்டு சுழற்சி முறையில் வருவது தான் இந்த 60 ஆண்டு கணக்காகும். இதன் தமிழராண்டின் முதல் நாள் சித்திரை 1 என்றார்கள்.

அயலாரால் திணிக்கப்பட்ட இந்த இன அழிப்பினை போக்கிட 1921 ஆம் ஆண்டு தமிழறிஞர் கா. நமசிவாயர் அவர்கள் அழைப்பில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழறிஞர் மறைமலையடிகளார் தலைமையில் 500க்கும் மேற்பட்ட தமிழறிஞர்களும், தமிழின உணர்வாளர்களும் ஒன்று கூடி தமிழ் ஆண்டுக் கணக்கு பற்றி ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

திருவள்ளுவர் பெயரில் தொடராண்டு முறையை உருவாக்குவதென்றும், தை ஒன்றாம் நாள் திருவள்ளுவர் ஆண்டு தொடக்க நாள் என்றும்,ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு  31 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானித்தார்கள் (எ.கா. - கி.பி 2015 என்பது தி.பி (திருவள்ளுவருக்கு பின்) 2046 ஆகும்).

இப்போதுள்ள தமிழ் மாதங்கள் தூய தமிழில் இல்லை என்பதால், தை - சுறவம் மற்றும் மார்கழி - சிலை என்றும், 12 மாதங்களுக்கும் தமிழ் பெயர் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களால் சூட்டப்பட்டது. நாட்களில் புதன் - அறிவன் மற்றும் சனி - காரி என்றும் தமிழ்ப்படுத்தபட்டது. மற்ற நாட்கள் தமிழில் உள்ளன.

தமிழறிஞர்களாலும், தமிழ் உணர்வாளர்களாலும் பல்லாண்டுகளாக வலியுறுத்தப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வந்த மேற்படி திருவள்ளுவர் ஆண்டு முறையை முதன் முதலாக தமிழ் நாடு அரசு 1971 ஆம் ஆண்டு தனது நாட்குறிப்பேட்டில் பயன்படுத்தியது. 1972 ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிட ஆணை பிறப்பித்தது.

திருவள்ளுவராண்டு முறையை அனைத்து ஆவணங்களிலும் குறிப்பிடவும், தமிழர் ஆண்டு தொடக்கமாக தை (சுறவம்) 1 ஆம் நாளை கடைபிடிக்கவும் திமுக ஆட்சியில் 1.1.2008 அன்று தமிழக சட்டப்பேரவையில் சட்டம் இயற்றியது. பின்னர்

வந்த அஇஅதிமுக ஆட்சி இச்சட்டத்தை நீக்கி சித்திரை ஆண்டு முறையை சட்டமாக்கியது.

ஆண்டு தொடக்கமாக சித்திரை 1 வருவதும், தை 1 வருவதும் வானவியல் அடிப்படையில் சரியான நாட்களே! சித்திரை 1இல் தொடங்கும் ஆண்டு முறை 60 ஆண்டுகள் மட்டுமே சுழற்சி முறையில் வருவதாக உள்ளது. இதன்படி வரலாறுகளை தொடராண்டு முறையில் கணக்கிட முடியாது. மேலும் சித்திரை ஆண்டுகள் சமசுகிருதமயப்படுத்தப்பட்டது.

தை 1 தொடங்கும் திருவள்ளுவர் ஆண்டு முறை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் செல்லும் தொடக்கத்தை அடிப்படையாக கொண்டு தமிழினத்தின் தனித்தன்மையை காக்க தமிழ் பெருந்தகை திருவள்ளுவரின் பெயரை கொண்டது. எனவே தமிழர்கள் திருவள்ளுவராண்டு முறையை பயன்படுத்துவது தமிழுக்கும், தமிழினத்திற்கும் பெருமை சேர்க்கும்.

தமிழின் மீட்சியே<br>
தமிழரின் எழுச்சி..<br>
- தேவநேய பாவாணர்

தரணி ஆண்ட தமிழருக்கு<br>
தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு..<br>
- பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் வாழ்க

**- மணிபாரதி தங்க சுந்தர்**

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY

**வசந்தன்**
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography

# முதல் உணவு, முதல் தரமான உணவு மஞ்சள் பொடி, வேப்பிலை பொடி



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

நாம் காலையில் எழுந்தவுடன் மஞ்சள் பொடியும் வேப்பிலை பொடியும் சாப்பிட வேண்டும்.

பயன்கள்:

1) குடல் புண் ஆற்றும்
2) சீரான சக்தி கிடைக்கும்
3) உடல் அரிப்பு நீங்கும்
4) மலச் சிக்கல் போக்கும்
5) சளியை வெளியேற்றும்
6) நோய் கிருமிகளை சேரவிடாது
7) குடல் புழு, கீரிப்பூச்சு அகற்றும்
8) நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
9) உள் உறுப்புகளின் கழிவுகளை நீக்கி உறுப்புகளை பலப்படுத்தும்

நாட்டுவேம்பு, நில வேம்பு, மலை வேம்பு மூன்றும் சேர்ந்திருந்தால் டெங்கு சுரம், டைபாயிடு, மலேரியா வராமல் தடுக்கும்.

இது அனைத்தும் உண்மை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் நம்வீட்டு பாட்டிகளை கேட்டால் தெரியும்.

மாடு கன்றுகுட்டி போட்டவுடன் பச்சரிசி, வேப்பிலை, மஞ்சள் இவற்றை இடித்து முதல் உணவாக கொடுப்பார்கள்.

கோழி குஞ்சு பொறித்தவுடன் பச்சரிசி, வேப்பிலை, மஞ்சள் இவற்றை இடித்து முதல் உணவாகக் கொடுப்பார்கள்.

எல்லா ஜீவனும் பறந்து வெளியுலகத்துக்கு வந்தவுடன் இதை தான் முதல் உணவாக எடுத்துக் கொள்கிறது.

ஏன் உணவைப்பற்றியே பேசுகிறோம் என்றால் உணவுக் குவியல் தான் நம் உடம்பு. உடம்பை பராமரித்தால் தான் எதையும் சாதிக்க முடியும். அதற்கு இந்த உடம்புக்கு

பொருந்தும் உணவை கொடுக்க வேண்டும். 50 ஆயிரம் ரூபாயில் வண்டிக்கு பெட்ரோல் என்றால் பெட்ரோல் போடுகிறோம், டீசல் என்றால் டீசல் போடுகிறோம். 5 கோடி ரூபாயில் உடம்புக்கு எதை வேண்டுமானாலும் போடுகிறோம்.

வண்டியை உருவாக்கியவர், சரி செய்பவரின் முகவரியை வைத்திருக்கும் நாம் நம் உடலை உருவாக்கியவர் சரி செய்பவரின் முகவரியை தொலைத்துவிட்டோம். அந்த முகவரி இது வரை நாம் எங்கு தேடியும் கிடைக்கவில்லையே.

இனிமேலாவது உள்நோக்கி போய் தேடிப்பார்ப்போமா?

உள்-கட,
கட-உள்

உடம்பால் அழியின்
    உயிரால் அழிவர்
உடம்பை வளர்த்தேனே
    உயிர் வளர்த்தேனே
உள்ளம் பெருங்கோயில்
    ஊனுடல் ஆலயம்

நாம் தூக்கத்திலிருந்து எழும் ஒவ்வொரு நாளும் நாம் புதிதாய் பிறக்கிறோம். புதிதாய் பிறந்து புத்துணர்ச்சியாய் வாழ முதல் உணவை முதல் தரமான உணவாக எடுத்துகொண்டு ஆனந்தமாய் வாழ்வோம்.

**- ராணிச்சந்திரன்**

# புத்தாண்டு வருக!

புதுப்பொலிவைத் தருக!

புது நிலவே வருக, இருள் உலகைப் போக்க;
புது மழையே வருக, மண் வாசம் தருக;

நேற்று தவறவிட்ட வாழ்க்கை இன்று
மறுபடியும் வருகிறது இன்னொரு விடியலாய்!....

புது ஆண்டே வானவில்லாய் வந்து
வண்ணப்பொலிவைத் தந்து விடு;


விடுதலை வேட்கையை விதியாய் கொண்ட
வேங்கைக் கூட்டத்தினருக்கு
இனி வரும் விடியல் வசந்தமாகும்!.....

நிகழ்ந்ததை நினைவு கூறும்
அந்த நாளும் வரும் இந்த ஆண்டில்..

பூக்கட்டும் புது ஆண்டு..
செழிக்கட்டும் பல ஆண்டு..

தைத் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்..

பொன்மணி வள்ளுவன்
கீழத்திருப்பாலக்குடி



சாந்தி பிரசன்னா
மன்னார்குடி

# தைமகள் வருகிறாள்

அந்நாளில் ஆடித்திங்களில்
மதகுகளை உடைத்துக் கொண்டு
பூஞ்சோலை வழியே நீர்தூவி
பொன்னி மகள் துள்ளி வர
ஊர் பூணும் விழாக் கோலம் !

ஓரேர் உழவனை
ஆதவன் ஆசிர்வதிப்பான் அவனியிலே !
அவன் வியர்வை கழனியெங்கும்
உரமாகும் !

வாய்க்காலில் வரும் கெண்டைக் குஞ்சு
வயலில் துள்ளி விழும் !
சேற்றில் பதுங்கும் குரவை !
வயிறு நிரம்பத்தின்று
வளையடைத்து வாழ்ந்திருக்கும்
வயல் நண்டு !

வரப்புகளின் மேல் வளைந்து நிற்கும்
நெற்கதிர்கள் !

கதிர்களின் இடுக்குகளில்
குடும்பமாய் வசித்துவரும்
பறவைக்கூட்டம் !

ஊரே வணங்கி நடத்தும்
அறுவடைத் திருவிழா !

காவல்காரன் முதல்
கட்டியங்காரன் வரை பகிர்ந்தளிக்கப்படும்
நெல்மணிகள் !

பச்சரிசி இடித்து
மஞ்சள் பிடிங்கி
கரும்பு நட்டு
காத்திருப்போம் இளையவளான
தைமகளின் வருகைக்காக ...!

இந்நாளில்
மூத்தவள்
கர்நாடகத்தில் சிறைப்பட !

வாழ்வு தரும்
வயல் நிலம்
முறைமையிற் திரிந்து
பாலையாய் காட்சியுற !

தைமகள் வருகிறாள் !
காத்திருக்கிறோம்
நீண்ட வரிசையில்
நியாய விலைக் கடைகளில்

இலவசப் பொங்கல் பை வாங்க !



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747
vasiva1711gmail.com

# MRT உடற்பயிற்சி கூடம்



நிறுவனர்
திரு. M. அன்வருதீன்

நோயற்ற வாழ்வும் உடற்பயிற்சியும்

வீரத்துக்கும் விவேகத்துக்கும் பெயர் பெற்றது நமது மன்னை, அதற்கு வலுசேர்க்கும் வண்ணம் M R T உடற்பயிற்சிக் கூடமும் உள்ளது என்றால் அது மிகையல்ல.

அதன் நிறுவனர் திரு. M. அன்வருதீன் அவர்கள் நம்மோடு பகிர்ந்து கொண்டவைகள் உங்கள் பார்வைக்கு.

இளைஞர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வழிப்படுத்தும் வகையில் நமது உடற்பயிற்சி மையம் 05.07.2002 அன்று நமது தாலுக்கா அலுவலகம் சாலை, காவல் நிலையம் எதிரில் துவக்கப்பட்டது. தற்பொழுது குழந்தை இயேசு தெருவில் இயங்கி வருகிறது.

பொது நலத்துடன் துவக்கப்பட்ட நமது உடற்பயிற்சி மையம் பள்ளி மாணவ மாணவிளுக்கு இலவச பயிற்சியும் ஏழை எளிய மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் வெற்றி பெறுபவர்களை மாநில அளவிற்கும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் அளவிற்கு தக்க பயிற்சியை இலவசமாக கொடுத்து அவர்கள் வெற்றி பெற எல்லா வகையிலும் உறுதுணையாக இருக்கிறோம்.

அவ்வண்ணமே வெற்றி பெரும் வீரர்களுக்கு அரசாங்கத்திலிருந்து தரப்படும் அனைத்து சலுகைகள் மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வாங்கித் தருவதிலும் முனைப்புடன் இருக்கிறோம். பொதுவாக நாங்கள் பளு தூக்குதல், பவர் லிஃபிட்டிங், பாக்ஸிங், சிலம்பம் மற்றும் பாடி பில்டிங் இவற்றிற்கான பயிற்சிகளை சிறப்பான பயிற்சியாளர்கள் மூலம் தனித்தனியாக அளிக்கின்றோம்.

உடல் பருமன் பெறவும், உடல் பருமன் குறைக்கவும் சிறப்பான பயிற்சிகள் எங்களிடம் உண்டு.

மன்னை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நமது உடற்பயிற்சிக் கூடத்தை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. உடற்பயிற்சி தொடங்கும் முன் ஒவ்வொருவருக்கும் நல்ல பழக்கம் மற்றும் தனி மனித ஒழுக்கம் பற்றிய விழிப்புணர்வு வகுப்புகள் எடுக்கப்பட்டு முறையான மூச்சு பயிற்சியில் தொடங்கி படிப்படியாக அடுத்தக்கட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

எங்கள் உடற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர் எந்தவித கிரிமினல் குற்றத்திலும்

ஈடுபட மாட்டார்கள்.

பதினைந்து ஆண்டுகளில் நமது உடற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று மாநில அளவிலான பவர் லிஃபிட்டிங் போட்டிகளில் 70க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்க பதக்கமும், 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்க பதக்கமும், தேசிய அளவில் 50க்கும் மேற்பட்ட பெண்களும் 60க்கும் மேற்பட்ட ஆண்களும் தங்க பதக்கத்தையும் வென்று உள்ளனர். அதே போல பளு தூக்குதல், பாக்ஸிங் ஆகிய பிரிவுகளில் தேசிய அளவிலான போட்டிகளில் 100க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் பெற்றுள்ளனர். மேலும் காவல்துறை மற்றும் மத்திய மாநில அரசு வேலைவாய்ப்புகளை பெற்று பயன் அடைந்து உள்ளனர்.

நமது உடற்பயிற்சி மையத்தின் சார்பில் மன்னார்குடியில் 12 முறை பளு தூக்கும் மாநில அளவிலான போட்டிகளும், 10 முறை பவர் லிபிட்டிங் போட்டிகளும், 4 முறை குத்துச்சண்டை போட்டிகளும் 5 முறை மாநில அளவிலான சிலம்ப போட்டிகளும், 9 முறை ஆண் அழகன் போட்டிகளும் மிக சிறப்பாக நடத்திக் காட்டிய பெருமை நமது உடற்பயிற்சி மையத்தையே சாரும். இன்றைய உணவு பழக்க வழக்க சூழ்நிலையில் உடற்பயிற்சி செய்தால் மட்டுமே நோய்களிருந்து நம்மை காத்துக்கொள்ள முடியும்.

ஆகையால் அனைவரும் உடற்பயிற்சி செய்வோம். உடல் நலம் காப்போம் ...

## சமுதாயம்

அக்கறை கொண்டேன்
சமுதாயத்தின் மீது

உள்நோக்கம் என்றனர்

அமைதியாகவே இருந்தேன்
அடிமை என்றனர்

போராட்டங்கள் பல செய்தேன்
நாடகம் என்றனர்

அரசியலை நாடினேன்
அவதூறு என்றனர்

எது செய்தாலும் தடை
உண்டு

அதை தகர்த்தெறிந்தால்
வெற்றி உண்டு



ம. மணிவர்மன்

# உயிரில்லா உருவம்

அபிநயங்கள் கடந்ததொரு அழகி
தேடல்கள் மிக்கதொரு திருமகள்

நிறைகுறை பொருந்தியதொரு
குணமகள்

உறக்கங்கள் விடுக்கச் செய்யும்
உளவாளி

என்னைச் சிறுக சிறுக கொன்று
புதைக்கும் தேவதை

எம்மதத்தையும் தழுவாமலிருந்த
என்னை தாமதத்தை தழுவச் செய்த
தாரகை

கலி நீவி சென்றவனை கரத்தினுள்
கைப்பற்றிய கனிகை

விழிநீர் இரவெல்லாம் தலையணை
நனைக்க வலியோடு உறங்க செய்யும்
காரிகை

சோற்றுடைத்த சோழ பரப்பில்
சோம்பலை பரப்பிய காந்தாரி

விரலினுள் ஐந்தோடு ஆறாய் நீ ஒட்டிக்
கொண்டதால்

ஓடி விளையாடு பாப்பா
கைப்பேசி விளையாட்டாகாது பாப்பா
என்றிருப்பான் முண்டாசு கவிஞன்

உலகம் உன் கையில் என்ற
உற்சாகமான வாக்கியத்தை
உண்மையாக்கிய நீ,

நான்கால் பயணம் வரை வருவாய்
என மடுத்த செவியுடன்
பயணிக்கிறேன் என்னவளான
கைப்பேசியுடன்...




செந்தில்குமரன்
மன்னார்குடி

# மீனவர்களைக் காக்க தவறிய கப்பற்படை

என்னுடைய தோழர் (மீன்பிடி தொழில் செய்பவர்) ஒருவரிடம் ஓகி புயலால் மீனவர்கள் அடைந்த பாதிப்பை பற்றி பேசினேன். இது வரை சுமார் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் இறந்துள்ளார்கள். அதுவும் ஆழ்கடல் பகுதி சென்று வரும் 8 கிராம மீனவர்கள் மட்டும் கணக்கில் எடுத்து கொண்டால்.

காரணம் தமிழகம் மற்றும் இந்தியாவில் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்கும் ஒரே பகுதி கன்னியாகுமரி மற்றும் அதன் 8 கிராமத்தில் உள்ள மீனவர்கள் மட்டுமே. அவர்களை தவிர்த்து வேறு யாராலும் ஆழ்கடல் பகுதியில் துணிச்சலாக சென்று மீன் பிடிக்க முடியாது.

ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் கடலுக்கு சென்றவர்கள் கரைக்கு வரவில்லையென்றால் அவர்கள் இறந்ததாக, அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கருதத் தொடங்கி விடுவார்களாம். நேற்றுடன் அவர்களுக்கான நாள் முடிந்துவிட்டதாம். மற்றும் ஒரே கிராமத்தில் இருந்து 150க்கும் மேற்பட்டவர்கள் கரைக்கு திரும்பவில்லையாம்.

ஒரே சோகத்துடன் காணப்படுகிறது என்றும். கடந்த ஒரு மாதமாக யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை என்றும் கூறினார். அவரின் கணிப்புப் படி சனவரி 15க்கு பிறகு தான் கடலுக்கு மீனவர்கள் செல்வார்கள் என்றார்.

அரசிடம் இருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை, அதே நேரத்தில் ஆழ்கடல் பகுதிக்கெல்லாம் சென்று தேட முடியாது 60 மைல் (Nautical) வரை தான் சென்று தேட அனுமதி என்று சொல்லி கடற்படை பின்வாங்கி விட்டது. ஆனால் ஆழ்கடல் பகுதிக்கு செல்லும் மீனவர்களே சென்று சுமார் 50க்கும் மேற்பட்ட மீனவர்களை மீட்டுவந்துள்ளார்கள் 400 மைல்களுக்கு அப்பால் சென்று.

கடற்படை பேசும் அளவிற்கு களத்தில் திறனில்லை என்றார். ஏற்றுமதி துறையில், அதாவது அந்நிய செலவாணி அதிகம் பங்களிப்பது மீனவர்கள் தான். குமரியில் உள்ள 4 சிறு சிறு துறைமுகங்கள் மூலம் சுமார் 8000 கோடி அரசு வருவாய் பெறுகிறது. சரியாக செயல்பட்டால் சுமார் 20000 கோடி அரசாங்கத்திற்கு செல்லும்.

அதிகம் இறந்தவர்கள் இளைஞர்கள், சில குடும்பத்தில் இருந்து அண்ணன், தம்பி, அப்பா என்று கூட கடலுக்கு சென்று உள்ளார்கள். ஆனால் வீடு திரும்பவில்லை இன்று வரை.

அவர் அரசிடம் இருந்து பணத்தை எதிர்பார்க்கவில்லை, மாறாக அவர்களை காப்பாற்றவே கூறியுள்ளார்கள். ஆனால் இந்த அரசால் அதுவும் செய்ய முடியவில்லை.

இறந்தவர்களின் எண்ணிக்கையை சரியாக காட்டினால் அரசிற்கு இழுக்கு என்று, 5 மீனவர்கள், 10 மீனவர்கள் இறந்ததாக கூறி வருகின்றனர் ஊடகங்களில்.

ஒரு படகு, ஒரு முறை கடலுக்கு சென்று வரவே குறைந்தபட்சம் ரூ.2,00,000/- எரிபொருளுக்கு செலவிடுகிறார்கள். ஆண்டிற்கு சுமார் 1 கோடி எரிபொருளிற்காக மட்டும் செலவிடுகிறார்கள். எந்த ஒரு மானியமும் அரசிடம் இருந்து பெறுவதும் இல்லை. மாறாக அதில் வரும் பாதிப்புகளையும் அவர்களே சந்திக்கிறார்கள்.

இவர்கள் எரிபொருளிற்காக செலவிடப்படும் தொகையின் மூலம் மட்டும் அரசு பெறும் வரி பணம் எவ்வளவு என்றும், ஒரு படகிற்கு இவ்வளவு தொகை செலவிடப்படுகிறது என்றால், அங்குள்ள மொத்த படகுகளை பற்றி எண்ணிப் பார்த்தால் தெரியும் என்றார்.

கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் ஒரு இளைஞன் மாதத்திற்கு குறைந்தபட்சம் 25,000 முதல் 30,000 வரை ஈட்டுகிறான். இதனால் வேலை கிடைக்கவில்லை என்றால் உடனே மீன்பிடிக்கும் தொழிலுக்கு வந்து விடுகிறான்.

இந்தியாவிலேயே அதிக தொழிற்நுட்பத்துடன் படகு மற்றும் மீன்பிடி தொழிலை செய்து வருபவன் கன்னியாகுமரி மீனவன் மட்டுமே என்றார். கேரளாவில் அரசு பல திட்டங்களை வைத்துள்ளது, அவர்களை பாதுகாக்கிறது ஆனால் இங்கே அப்படி ஒன்றுமே கிடையாது என்றார்.

தன்னுடைய படகிற்கு மட்டும் இயந்திரம் மற்றும் குறைந்தபட்ச சேதாரத்தை சரி செய்ய சுமார் 16 லட்சம் தேவைப்படுகிறது. அப்படி பார்த்தால் இந்த புயலின் போது தொழிற்நுட்பங்களுடன் படகு வைத்திருந்தவர்கள் பலர் மற்றும் முற்றிலும் படகை இழந்தவர்களின் நிலை தான் மிகவும் கடினம். மீண்டு வர பல நாட்கள் எடுக்கும் என்றார்.

மீனவர்கள் ஒரு போதும், தங்கள் நம்பிக்கையை இழப்பதும் இல்லை, அதே நேரத்தில் இழப்பீடுக்காக யாரிடமும் மண்டியிடவும் தயாரில்லை என்றார். காரணம் அவர்களுக்கு தெரியும் எவ்வளவு சீக்கிரம் திரும்பி வர முடியும் என்று, ஆனால் இழந்த உயிர்களை நினைத்துதான் வருந்துகிறார்கள்.

அமைதியான முறையில் போராட்டம் நடத்தினோம், அதிலும் மத்தியில் ஆளும் அரசின் ஆட்கள் மீனவர்களுடன் சேர்ந்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறி திசை திருப்பி போராட்டத்தை நீர்த்து போகச் செய்தார்கள்.

விவசாயிகளுக்கும் சேர்த்தே போராடினால், அன்று சுமார் 20 போக்குவரத்து வாகனங்களை சம்பந்தமில்லாத ஆட்கள் உள்ளே நுழைந்து அடித்து நொறுக்கி

விட்டனர். அமைதியாக நடந்த போராட்டத்தில். அனைத்தும் திசை திருப்பப்பட்டுவிட்டது என்றார்.

கிறித்துவர்கள் அதிகம் பொருளாதார அடிப்படையில் உயர்ந்து இருப்பதாலும், அதனை சிதைக்க இது ஒரு வாய்ப்பாக கருதி இவ்வளவு பெரிய இழப்பை கண் முன்னே இருட்டடிப்பு செய்துவிட்டார்கள் அரசியலில் உள்ளவர்கள். ஆனால் அவர்கள் கிந்துகளுக்கும் ஒன்றும் செய்யவில்லை, அது தான் உண்மை. அங்குள்ள மீனவ குடும்ப உறுப்பினர்களிடம் பேசினால், நம் கண்கள் கலங்க செய்கின்றன.

ஏதோ ஒரு வழியாக என்னுடைய மீனவர்கள் ஆழ்கடல் பகுதிக்கு செல்லாததால் உயிருடன் வந்து சேர்ந்தார்கள். அதுவே எனக்கு பெரும் நிம்மதி என்றார். இன்று மீனவர்களுக்கு நடந்தது, நாளை யாருக்கும் நடக்கலாம். எப்பொழுது ஆட்சி கவிழும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள் அங்குள்ளவர்கள்.

மத்திய அரசிடம் இருந்து பெறப் போகும் இழப்பீட்டு தொகையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்து சேரப்போவது இல்லை. அனைத்தும் வாய் மொழியாகவே உள்ளது, எழுத்தில் எதுவுமில்லை. இந்த போராட்டத்தை திசை திருப்பியவர்களே அந்த பணத்தையும் திசை திருப்பி எடுத்து செல்வார்கள் என்றே நினைக்கிறேன் என்றார்.

யாரோ பலர் இழக்க, யாரோ சிலர் அந்த பணத்தை அனுபவிக்க போகிறார்கள் என்பதே உண்மை என்றும், அடுத்தாக அரசு கொண்டு வரும் எந்த திட்டத்திற்கும் மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள், காரணம் அந்த அளவிற்கு பாதிப்படைந்து விட்டார்கள் இதுவரை இல்லாத அளவிற்கு என்றார் அவர்.

ஆழ்கடல் பற்றி துளியும் அறிவில்லாதவர்கள் எல்லாம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறார்கள். என்னுடன் பணி புரியும் மீனவர்கள் 60 மைல்கள் தான் எப்பொழுதும் செல்கிறோம். ஆனால் கன்னியாகுமரி 8 கிராம பகுதி மீனவர்கள் மட்டுமே தமிழகம் மட்டுமில்லாது, இந்தியாவிலும் ஆழ்கடல் பகுதிக்கு சென்று மீன் பிடிக்க கூடியவர்கள் என்று கூறினார்.

அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது, நம் முன்னே நடந்த இழப்பை மூடி மறைக்கிறார்கள், அதையாவது மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

**- மன்னை மதி**

# பரவாக்கோட்டை தெற்குத்தெரு பாலம் பேருந்து நிறுத்த நிழற்குடை

கிட்டத்தட்ட 12 வருடங்களுக்கு மேலாக பரவாக்கோட்டை தெற்குத்தெரு பாலம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை இல்லாமல் சிரமப்பட்ட மக்கள் சிரமப்பட்டு வந்தனர். அதற்கு தீர்வு காணும் விதமாக பரவாக்கோட்டை இளைஞர் எழுச்சி பேரவை என்ற பொதுநலன் அமைப்பின் சார்பாக கிட்டத்தட்ட ரூ.85,000/- செலவில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை கட்டப்பட்டது. திறப்பு விழா கிராமத்தில் உள்ள பள்ளி மாணவர்களைக் கொண்டு 17/12/2017 அன்று காலை 10 மணியளவில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.







# தண்ணீல கண்டம்



பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

ஆம். இது தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொருந்தும். இந்த கட்டுரையை எழுத ஆரம்பிக்கும் போது நிறைய கண்டங்களை எழுதலாம் என்று நினைத்தேன். ஆனால் சில நாள் முன்பு ஒரு மீம் பார்த்தேன் அதில் எளிமையாக விளக்கியிருந்தார்கள் அதான் அதன் போக்கிலேயே எழுதி விடலாம் என்று எழுதியுள்ளேன்.

அதில் ''ஒருவன் தண்ணியில்லாமல் சாகிறான், ஒருவன் தண்ணீரில் சாகிறான், ஒருவன் தண்ணி அடிப்பதால் சாகிறான்'' என்று இருந்தது.

<u>முதல் கண்டம் - தண்ணீர் இல்லாமல் சாவது</u>

காடுகளில் தண்ணீர் இல்லாமல் விலங்குகள் அழிகிறது. நகரங்களில் விவசாயிகள் சாகிறார்கள். ஆம், நமக்காக நம்மை உயிருடன் வாழவைக்க அவன் உயிரை விடுகிறான். முப்போக விளைச்சல் ஆசையை காட்டி இன்று பயிர்களுக்குள் சுழற்சியே இல்லாமல் செய்தது போல், தண்ணீருக்காக ஆற்றை நம்பி இருந்தவர்களை போர்வெல் ஆசையை காட்டி இன்று அதிலும் தண்ணீர் இல்லை.

அந்த ஆசையால் நம் உரிமையைக் கூட மறந்துவிட்டோம். நமக்கு வர வேண்டிய ஆற்று தண்ணீரையும் நம்மால் போராடி கூட பெற முடியவில்லை. இது விவசாயிகளுக்கு மட்டுமில்லை நம்மைப் போன்றோர்களுக்கும் தான். நம் வீட்டு ஆழ்குழாய் கிணற்றிலும் தண்ணீர் வற்றிப்போகும் அப்போது என்ன செய்யப் போகிறோம்?

சாப்பிடாமல் கூட வாழ்ந்துவிடலாம் ஆனால் குடிக்க தண்ணீர் இல்லாமல் யாராலும் இருக்க முடியாது. இந்த கண்டத்திலிருந்து நம்மை காக்க இந்த அரசு எதையும் செய்யப் போவதில்லை. நம்மை நாமே காத்துக் கொள்ள முயல்வோம்.

<u>இரண்டாவது கண்டம் - தண்ணி அடித்து சாவது</u>

மதுபானம், மேலை நாடுகளில் அவரவர் நாட்டின் வெப்ப நிலைக்கு ஏற்ப பயன்படுத்தினார்கள். ஆனால் இந்த கலாச்சாரம் நம் நாட்டிலும் ஊடுருவி வலியை மறக்கவும் மகிழ்ச்சிக்காகவும் குடிக்கலாம் என்ற எண்ண ஓட்டத்தை உருவாக்கி அதை பெரிய வியாபார சந்தையாக மாற்றி விட்டார்கள்.

இதற்கு முன்பு பார்த்த கண்டத்தில் அரசு கவனம் செலுத்தவில்லை. ஆனால் இந்த கண்டத்தை மேம்படுத்துவதில் தான் அரசு முழு கவனம் செலுத்துகிறது.
ஆம், டாஸ்மாக் என்ற பெயரில் அரசு மதுக்கடைகள் இயங்காத ஊரே கிடையாது. பள்ளிக்கூடம், அரம்ப சுகாதார மையம், மின்சாரம், பேருந்து இப்படி அத்தியாவசிய வசதிகள் இல்லாத ஊரிலும் கூட இந்த அரசு மதுக்கடைகள் செயல்படுகின்றன. நீதிமன்ற தீர்ப்பில் நெடுஞ்சாலைகளில் மதுக்கடைகள் இருக்க கூடாது என்ற அறிவிப்பு வருகிறது.

இரண்டே நாட்களில் சாலைகளின் பெயரை மாற்றி மீண்டும் திறக்கிறார்கள். போதா குறைக்கு ஊரிலுள்ள சில வீடுகளை வாடகைக்கு எடுத்து அங்கும் திறக்கிறார்கள். இதில் குடித்து அழிந்து போவது ஏழை எளிய மக்கள் தான். விலை குறைவாக கிடைக்கிறது என்பதற்காக தினமும் குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதன் தரம் மிகவும் கொடியது. அதை குடிப்பதற்கு நம் ஊரில் ஓடும் சாக்கடை நீரை குடித்துவிடலாம்.

இந்த குடிப்பழக்கத்தால் பாதிக்கப்படுவது குடிப்பவர் மட்டுமல்ல, அவர் குடும்பத்தினரும் தான். திருந்தி வாழ்வோம் அல்லது குடித்து சாவோம்.

<u>மூன்றாவது கண்டம் – தண்ணீரில் சாவது</u>

விடுமுறை நாள் என்றாலே பலரது வீட்டில் அசைவம் தான், அதிலும் குறிப்பாக கடல் மீன் குழம்பு, வறுவல் என விருந்து பலமாக இருக்கும். அதை காசு கொடுத்து வாங்கி சமைத்து சாப்பிடும் நமக்கு, அதை பிடித்து வரும் மீனவனின் இன்னல்கள் நமக்கு தெரியாது. அவர்கள் மீன் பிடிக்க செல்ல வேண்டுமென்றால் நம்மைப் போல் காலை வேலைக்கு சென்று மாலை திரும்புவதில்லை.

ஒரு வார காலம் பிடிக்கும் அவர்கள் சென்று வர. அதுவரை அவர்கள் உணவு முதல் அனைத்தும் அந்த கடல் உள்ளேயே தான். ஆனால் இன்றைய நிலைமையில் அவர்கள் திரும்பி வருவார்களா என்பதே கேள்விக்குறி தான். இதில் இயற்கை ஒரு புறம் இருந்தாலும் நம்மை ஆளும் அரசுகள் மீனவனை மீனவ தொழிலில் இருந்து அழித்து நம் நாட்டில் இருக்கும் கடற்கரைகளை கைப்பற்றி தனியார் வசம் ஒப்படைத்து பெரிய முதலாளிகளை வளர்ப்பதில் தான் முழுக் கவனம் செலுத்துகிறது.

இந்த திட்டத்திற்குப் பெயர் ‘சாகர் மாலா’ சென்ற மாத இதழில் வசந்தன் இதைப்பற்றி தெளிவாக எழுதியிருந்தார், நேரம் இருந்தால் அதையும் படியுங்கள். மேலும் இந்த திட்டத்திற்கு தடையாக இருப்பவர்கள் மீனவர்கள் தான் அதனால் அவர்களை பயமுறுத்தி அவர்களை அங்கிருந்து விரட்டுவது தான் அரசின் எண்ணம்.

இதன் முதற்படியாகத் தான் கடலில் எண்ணெய் கொட்டி வாளியால் அள்ளியது, தமிழக மீனவனை இந்திய கடலோர படையே சுட்டது, புயல் உருவானதை முன்கூட்டியே தெரிவிக்காமல் கொன்றது, காணாமல் போன மீனவர்களை தேட உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்காதது என பல வழிகளில் அவர்களை அழிக்கும் பணியை மும்மரமாக செய்கிறார்கள்.

இப்படி பல கண்டங்களுக்கு நடுவில் தான் நாம் நம்மை பற்றி மட்டுமே யோசித்து எங்கேயும் நம்மால் நமக்கு வேண்டியதை நிறைவேற்றிக்கொள்ள முடிவதில்லை. இதை லாவகமாக பயன்படுத்திக்கொள்கிறது இந்த கையாளாகாத அரசு. நிலைமை இப்படியே சென்றால் நாம் அனைவரும் ஒடுக்கப்பட்டு அவர்கள் கூறுவதையே சாப்பிடவேண்டும், செய்ய வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுவோம்.

அதனால் தான் ஆதார் இப்படி முக்கியத்துவபடுத்தப்படுகிறது அதை பற்றி வேறொரு கட்டுரையில் கூறுகிறேன். ஒற்றுமையே பலம் என்பதை சொல்லில் மட்டும் இல்லாமல் நம் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து வெல்வோம்.

என்னடா எப்போதும் பிரச்சனை பற்றியே எழுதுகிறாய் என்று கேட்கிறீர்களா? ஆம், நம்மை மகிழ்வித்து நம் உரிமையை மறைக்க பல தளங்கள் உள்ளன. அதனால் தான் நாம் நம் உரிமைகளையும் பிரச்சனைகளையும் நினைவுப்படுத்திக் கொள்ள இப்படி எழுதுகிறேன்.

நன்றி.

- பாலாஜி சுதந்திரராஜன்

# தைப்பொங்கல் பெருவிழா பண்பாட்டு திருவிழா

தைப்பொங்கல் என்பது தமிழரின் பண்பாட்டு திருவிழா..இது ஏன் பண்பாட்டு திருவிழா என்று அழைக்கப்படுகிறது என்றால் நாம் பணிபுரியும் அலுவலகத்தில் நம்மை விட உயர்ந்த பதவியில் இருப்பவருக்கு வணக்கம் சொல்வது என்பது நாகரிகம் அதே நம்மை விட குறைந்த பதவியில் இருப்பவர்களை வணங்கி மரியாதை செய்வது என்பது பண்பாடு

தை முதல் நாள் உலக உயிருக்கு ஆதாரமாக இருந்து உழவுக்கும் உயிர் தந்த சூரியனுக்கு நன்றி தெரிவித்து மறுநாள் நம் பண்ணை தொழில் பங்காளியாக இருந்து உழவுக்கு உழைப்பை தந்த மாட்டிற்கு நன்றி தெரிவித்து ஒரு நாகரிக பண்பாட்டு திருவிழாவைக் கொண்டாடும் ஒரு இனம் தமிழினம் மட்டும் தான்..

பொங்கலிட்டு வழிபடுவது ஏன்?

நம் முன்னோர்கள் நன்றி என்பதை வெறும் சொல்லில் மட்டும் இல்லாமல் செயலிலும் செய்துள்ளனர். அதுவே பொங்கலிட்டு நன்றி கூறும் முறையாக கடைபிடிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக பாஞ்சாலி சபதம் இயற்றிய நம் அருமை பெரும் பாட்டன் பாரதி, பாஞ்சாலியை வென்ற வெற்றி களிப்பில் தன் மாமன் சகுனியை பார்த்து, துரியோதனன் மாமனே உனக்கு பொங்கலிட்டு பூசை செய்து நன்றி கூறுவோம் என்று குறிப்பிடுகிறார்.

தைப்பிறந்தால் வழி பிறக்கும் எப்படி?

1) மார்கழி மாதத்தில் பயிர்கள் நன்றாக வளர்ந்து வரப்புகளில் படர்ந்து கிடக்கும். எனவே பாதைகள் இன்றி சுற்றி போகும் நிலை ஏற்படும் தை மாதம் அறுவடை செய்த பின் வழி பிறக்கும்..

2) ''உழுதவன் கணக்குப் பார்த்தால் உலக்கை கூட மிஞ்சாது'' - பழமொழி பொதுவாக விவசாயம் செய்ய விவசாயிகள் கடன் வாங்குவது என்பது கட்டாயம். தை மாதம் அறுவடை செய்து சந்தையில் விற்று பணமாக்கி மகிழ்ச்சியாக வாழ்வார்கள். பெரும்பாலும் விவாசாயி வீட்டு திருமணங்கள் தை மாதமே நடைபெறுகின்றன..

3) இக்காரணத்தில் நம் முன்னோர்கள் அறிவியல் நுட்பம் தெளிவாக விளங்குகிறது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. இதற்கு 365 நாட்கள் ஆகிறது. அதன் பாதி தென் திசை மறுபாதி வடதிசை இதை தட்சீனாயனம், உத்திராயனம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.. தை ஒன்றாம் நாள் தான் தான் பயணிக்கும் தட்சீனாயனம் பாதையில் இருந்து உத்திராயனம் பாதைக்கு திரும்புகின்றது. பூமி பாதையின் திருப்புமுனை.. எனவே பூமிக்கே வழி பிறக்கும் நாள் தைத் திங்கள் முதல் நாளே.

இப்படிப்பட்ட அறிவியல் மற்றும் நாகரிக பண்பாட்டு திருவிழாவை நாம் அனைவரும் பெருமையுடன் கொண்டாட வேண்டும்.

- மணிபாரதி தங்க சுந்தர்





- ஓவியம் -

மு. சூர்யா

மன்னார்குடி

# ஆர்ப்பரிப்புகளோடு ஆரம்பமாகிறது

ஆங்கில ஆண்டின் முதல் நாள்
மேற்குலகின் மேதமையை
தொழுது வழிபடுகிறது
நுகர்வுப் பண்பாட்டின்
நுகத்தடியில் சிக்குண்ட
வெகுமக்கள் உளவியல்
ஆண்ட தமிழினம்
தன் ஆண்டை தொலைத்து
நிற்கிறது

வேண்டாத கவர்ச்சியெல்லாம்
நமதென்று துடிக்கிறது

ஆங்கில ஆண்டை
அருவருக்க சொல்லவில்லை
வாழ்த்துகள் சொல்லுவதில்
வம்பேதும் எமக்கில்லை
மரபை மறந்து போகும்
மனநிலை வேண்டாம் என்றேன்

கொண்டாட்டம் என்ற பெயரில்
நுகர்வு போதை வேண்டாம் என்றேன்

பன்னாட்டு வேட்டை மது
மயக்கம் அது வேண்டாம் என்றேன்

இனத்தின் பெருமை பேசும்
பண்பாட்டை மீட்டெடுப்போம்
அறுவடைத் திருநாளே
ஆண்டின் துவக்கம் என்ற
அறிஞர் பெருமக்கள்
அறக் கூற்றை ஆதரிப்போம்

சுறவம் முதல் நாளே
தமிழர் புத்தாண்டென்று
விவரம் தெரிந்தோரின்
தெளிந்த நல் கூற்றையேற்று
தமிழர் பேராசான்
வள்ளுவன் பேர் சொல்லும்
ஆண்டுக் கணக்கே
நமது என்றறிவோம்
தமிழர் மரபுகளை
மீட்டெடுத்து காத்திடுவோம்!



ஆரல்கதிர் மருகன்

# மாடு மேய்க்க போவோம்



G.T. மகேஷ்

நன்றாக படிக்கவில்லை என்றால் நம் வீடுகளிலும் பள்ளிகளிலும் கூறும் ஒரே வார்த்தை படிப்பில்லை என்றால் மாடு தான் மேய்க்க வேண்டும் என்று அனைவரும் கூறுவார்கள். அவ்வாறு கூறுபவர்களுக்கு மாட்டை பற்றியும் மாட்டின் முலம் கிடைக்கும் லாபத்தை பற்றியும் எழுதுவதே இந்த கட்டுரை.

நம் தமிழ்நாட்டில் பயன்படுத்தும் நாட்டு மாடுகளை பற்றி பார்க்கலாம்

காங்கேயம்
உம்பளச்சேரி
பர்கூர்
தாங்கி
தியோகி
ஓங்கோல்
புங்கனூர்
நிமாரி
சிறி
பொண்வார்
சிகப்புகாந்தி
வச்சூர்
ஆலம்பாடி
புகாரி

நம் மாட்டின் அடையாளங்கள்

காங்கேயம் - பெரிய திமில், பெரிய உடம்பு
உம்பளச்சேரி - குட்டை ரக மாடு உழவனுக்கு உதவுவது

ஒரு தனி மனிதனிடம் 4 பசு மாடுகள் 1 காளை இருந்தால் மாதத்திற்கு 40000 வரை சம்பாதிக்கலாம்,

நாட்டு மாடுகள் தினசரி 4 முதல் 8 லிட்டர் வரைபால் கறக்கும்,

| | |
|---|---|
| காங்கயம் மாடு | - 4 - 5 லிட்டர் |
| உம்பளச்சேரி மாடு | - 2 - 3 லிட்டர் |
| ஓங்கோல் மாடு | - 7 - 8 லிட்டர் |

அப்படியென்றால் 4 மாடுகள் தினசரி நாம் 20 லிட்டர் வரை பால் பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 லிட்டர் பால் | | | - 60 ரூபாய் |
| 1 மாடு | - 5 லிட்டர் | - 1நாள் | - 300 ரூபாய் |
| 4 மாடு | - 5 லிட்டர் | - 1நாள் | - 1200 ரூபாய் |
| 1 மாதத்திற்கு | - 1200*30 | | - 3600ருபாய் |
| எரு 2 டிராக்டர் | | | - 4000 ருபாய் |
| 36000 + 4000 | | | = 40000 ருபாய் |

மாதம் 40,000 ரூபாய் வரை நம்மால் சம்பாதிக்க முடியும்.

மாட்டு பாலினை குடிப்பது மூலமாக நம் நாட்டின் குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் அனைவரும் ஆரோக்கியமாக வாழலாம்

நம் வீட்டில் வளரும் குழந்தைகள் போலவே மாடுகளை பேணி காத்து வளர்க்க வேண்டும். மாட்டின் மூலமாக நாம் அனைவரும் பயன் அடையலாம். ஜல்லிக்கட்டு நம் தமிழ் நாட்டின் வீரம், ஏறு தழுவுதல் என் முப்பாட்டனார் அடையாளம்.

எனவே மாடு மேய்ப்பது அவமானம் அல்ல. தன்மானம். தற்போதைய தேவை.

- G.T. மகேஷ்



# Trendy தமிழன் - வைசாக்



Trendy தமிழன் - வைசாக்

வைசாக். 22 வயதாகும் ஹிப் ஹாப் இசை கலைஞர்.

பாலக்காட்டில் பிறந்த இவர் ஈரோடு மாவட்டத்தில் தான் வளர்ந்தார். வைசாக்கிற்கு அனைத்துமே அவருடைய தாய் வசந்தி தான்.

அவர் ஈரோடு மாவட்டத்தில் சிறு தையல் கடை வைத்துள்ளார். அந்த வருமானத்தில் தான் வைசாக்கை வளர்த்தார். சிறுவயதிலிருந்தே பாடுவதில் ஆர்வம் கொண்ட இவர், மூன்றாம் வகுப்பு படிக்கும் பொழுது பள்ளி மேடையில் இவர் பாடிய ''பார்த்த முதல் நாளே'' பாடல் இவருக்கு நிறைய கைத்தட்டல்களையும் பாராட்டுகளையும் கொடுத்துள்ளது.

நன்றாக பாடும் திறன் உடைய இவர் படிப்பிலும் கெட்டிக்காரர் தான். ஆம் எட்டாம் வகுப்பு வரை அவரது வகுப்பில் முதல் இடத்தை பிடித்தவர் அதன் பின் சராசரி மதிப்பெண்களை எடுத்தார். அதற்கு காரணம் பதின் பருவ பிள்ளைகளுக்கு உரிய சேட்டைகள் தான் என்று அவரது தாய் தெரிவித்தார்.

ஈரோடு அல் அமீன் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் பொழுது பள்ளி மேடையில் ராம் படத்திலிருந்து ''ஆராரிராரோ'' பாடலை பாடி ஆசிரியர்கள் மனதிலும் இடம் பிடித்தார். இவருக்கு சென்னை சென்று இசை கற்று இசையமைக்க தான் ஆசை.

படித்தால் வேறு துறைக்கு அனுப்பி விடுவார்களோ என்ற எண்ணத்தில் படிப்பை பாதியில் நிறுத்தியவருக்கு அவர் தாயார் கல்லூரி படிப்பை சென்னையில் படிக்க ஒப்புதல் வழங்கியதால் பள்ளி படிப்பை முடித்தார். இசை கற்று, தமிழ் சுதந்திர இசை (Thamizh Independent Music) மேடையில் தடம் பதிக்கும் கனவோடு சென்னை வந்த வைசாக், ஏவிடி Media கல்லூரியில் Visual communication படிப்பை தொடர்ந்தார்.

கல்லூரி கட்டணம் சரிவர செலுத்த இயலாததால் மூன்றாம் வருடத்தில் தனது படிப்பை நிறுத்திக்கொண்டார். அதன் பின் கல்லூரியில் பயில முடியாமல், கையில் போதுமான பணமும் இல்லாமல், தன் திறமையை மட்டுமே நம்பி தினம் உணவாக ஒரு தேநீர் மட்டுமே அருந்தி, வாய்ப்பு தேடி அலைந்தார்.

பாடல் எழுதி, இசை அமைத்து, பாடும் திறமை கொண்ட வைசாகிற்க்கு எதிர் பார்த்தது போல் சுதந்திர இசை புரிய வாய்ப்பு கிடைக்கவில்லை. திரைப்படங்களில்

வாய்ப்பு தருகிறோம் என்று கூறி பலர் ஏமாற்றிய நிலையில் நம்பிக்கை இழந்த வைசாகிற்க்கு உடனிருந்த நண்பர்கள் தான் நம்பிக்கை ஊட்டினர்.

இசை பயனத்தின் துவக்க காலகட்டத்தில் அனிருத் ரசிகராக இருந்த வைசாக், பின்னர் ஹிப் ஹாப் தமிழா வால் மிகப்பெரிய அளவில் தாக்கம் ஏற்பட்டு அவரை முன்னோடியாக கொண்டு சுதந்திர இசை புரிய முனைந்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன் இவர் பாடிய "No Rules" எனும் பாடல் சிறு ரசகர் பட்டாளத்தை உருவாக்க, அடுத்தடுத்து கிடைத்த இடங்களில் கணினி மற்றும் தன்னிடமிருந்த இசை கருவிகளைக் கொண்டு பாடல்கள் இயற்றி வந்தார். இதனிடையே நலிந்து வரும் தமிழ் மொழியை வளர்க்கவும் காலத்திற்கேற்ற மாற்றங்களை நெறியுடன் இசை வடிவில் படைக்கவும் வினோ என்ற நண்பருடன் சேர்ந்து  உருவாக்கப்பட்டது தான் Trendy Thamizhan இசைக்குழு. இதுவே வைசாகின் புணைப் பெயராக நாளடைவில் மாறியது. அப்பெயரிலேயே பாடல்கள் வெளியிட தொடங்கினார். எனினும் எந்த பாடலும் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

சமீபத்தில், சமூக வலைதளங்களை உயிர்ப்புடன் வைத்திருக்கும் "Meme Creators" பற்றி "MC Anthem" எனும் பாடலை வெளியிட, எதிர்பார்த்ததை விட அதிகமாக பகிரப்பட்டு, யுடியூப் மற்றும் முகநூலில் டிரெண்ட் ஆனது. இதுவே அவருக்கு பெரும் அங்கிகாரம் அளித்து, திருப்பு முனையாகவும் அமைந்தது.

MC Anthem’ல் கண்ட வெற்றி பல வாய்ப்பு கிடைக்க வழி வகுத்தது. அதோடு சமூக வலைத்தளங்களில் நல்ல அங்கிகாரம் கொடுத்த பல மீம் கிரியேட்டர்களின் நட்பும் கிடைத்துள்ளது.

ஆரம்ப கட்டங்களில், தன் தாயாரின் அன்பும், பள்ளி பருவ நண்பரான அர்ஷத் மற்றும் பிற நண்பர்கள் அளித்த ஊக்கமே வைசாகிற்க்கு சென்னை வர தைரியமளித்தது.

சென்னையில் கிடைத்த நன்பர்களான ஜூடாஹ், ராகவன் போன்ற பலர் இன்றுவரை ஊக்கமளித்து வருகின்றனர். வைசாகின் இசைக்கு அஷ்ரஃ, யஹ்யா, நந்து போன்றோர் தீவிர ரசிகர்களாக உள்ளனர். இவர்கள் மட்டுமின்றி, தற்போது நடிகர் யூதன் பாலாஜியும் வைசாகின் நலம் விரும்பியாக உள்ளார்.

இதுவரை No Rules, Madaraasi, Kalaamism, மனிதம் எங்கே, வீசும் காற்றும், Jallikattu Anthem, MC Anthem, போன்று பல்வேறு பாடல்கள் பாடியுள்ளார். பாடல்கள் மட்டுமின்றி பல குறும்படங்களுக்கு இசை அமைத்தும் உள்ளார்.

வெறும் கேளிக்கை, காதல் சார்ந்த பாடல்கள் மட்டுமின்றி சமூக சிந்தனைகளைக்

கொண்ட பாடல்களை தொடர்ந்து இயற்றி வந்துள்ள வைசாக், இனிவரும் காலங்களிலும் சமூகப் பிரச்சினைகளை களையும் விதத்தில் விழிப்புணர்வு பாடல்களையும் வணிக ரீதியிலான பாடல்களையும் இயற்றவுள்ளார்.

2017, நவம்பர் 19ஆம் தேதி Tamil Nadu Achievers Conference'ன் இளம் இசைக் கலைஞன் விருது பெற்றார்.

இசை உலகில் தனக்கென ஓர் இடம் பிடித்து, தன்னை போன்று கஷ்டப்படும் திறமை உள்ள கலைஞர்களுக்கு உதவ வேண்டும் என்பதே தன் மகனின் கனவு என்று கூறிய வைசாக்கின் தாயார்,


ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாய் தன் மகன் விளங்க வேண்டும் என்பதே தனது விருப்பம் என்று நெகிழ்ந்து கூறினார்.

– பாலாஜி சுதந்திரராஜன்



சி.சிவஸ்ரீ
இரண்டாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
புள்ளவராயன் குடிக்காடு




ஓவியம்
ஜெசி





**பா.தமிழரசி,**
இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் ஸ்ரீ புஷ்பம் கல்லூரி
பூண்டி

# வாசிங்டன் சுந்தர் பயணம்



இந்திய கிரிக்கெட் 20:20 அணியில் குறைந்த வயதில் களமிறங்கிய விளையாட்டு வீரருமான, துளிப் கோப்பையில் ஒரே போட்டியில் அதிகபட்ச விக்கெட்களை (11) எடுத்த வீரருமான வாசிங்டன் சுந்தர் பற்றி அவரின் தந்தையுடன் நடந்த விவாதத்தை உங்களுடன் பகிர்வதில் மகிழ்கிறேன்.

என்னுடைய சென்னை நண்பர் ஸ்ரீதர் அவர்கள் நம் சுந்தர் அவர்களின் மகன் கிரிக்கெட் விளையாடுகிறார், அதுவும் இந்திய அணிக்காக விளையாட போகிறார் என்று சொன்னதும் அவருக்குள் அவ்வளவு மகிழ்ச்சி. இன்று சிங்கப்பூரில் இருக்கும் நான், சென்னையில் இருந்த பொழுது தான் ஸ்ரீதர் அவர்கள் மூலம் சுந்தர் அவர்களுடன் பழக வாய்ப்பு கிடைத்தது.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் நேரில் பார்த்தேன், அன்று ராயப்பேட்டை வெஸ்லி பள்ளி மைதானத்தில் சிறுவனாக பார்த்த பொழுது ஸ்ரீதர் அவர்களிடம் கூறுவேன், இவ்வளவு சின்ன பையன் கையில் இவ்வளவு பெரிய மட்டையா என்றும் கூறியுள்ளேன்.

தினமும் தந்தையுடன் விளையாட வரும் பையன் தான் வாசிங்டன் சுந்தர். இன்று இந்திய அணிக்காக விளையாட போகிறான் என்று நினைக்கும் பொழுது கேட்கும் எனக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சி.

ஸ்ரீதரும் நானும் அன்றைய நாட்களை நினைவு கூர்ந்தோம் நீண்ட இடைவெளிக்கு பின் வெகு நேரம் பேசிக்கொண்டு இருந்தோம். அப்படியே சுந்தர் அவர்களின் தொலைபேசி இலக்கத்தையும் ஸ்ரீதர் அவர்களிடம் இருந்து பெற்று கொண்டேன். அன்றைய தினம் நீண்ட வருடங்களுக்கு பின் கிரிக்கெட் நேரலையை பார்த்துவிடலாம் என்று நினைத்தேன்.

ஆனால் எதிர்பாராத விதமாக அவனுக்கு உடல்நிலை சரியில்லை என்று ஸ்ரீதர் சொன்னார். இந்த நேரத்தில் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று நினைத்தேன். இதே போல் அவன் விளையாடும் பொழுதும் அவரும் போட்டியை பார்த்து



கொண்டு இருப்பார் என்று நினைத்து அவரை அழைக்கவில்லை.

இன்று அவரை ஒரு வழியாக தொடர்பு கொண்டேன். நீண்ட நாட்களுக்கு பின் தொடர்பு கொள்வதால் ஸ்ரீதர் அவர்களின் தோழர் மாணிக்கம் பேசுகிறேன் என்று அறிமுகம் செய்ய, அவர் அன்றைய தினங்களை மறக்காமல் மகிழ்வுடன் பேச தொடங்கினார். முதலில் அவருக்கும், மகன் வாசிங்டன் சுந்தருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டேன். அவருக்கு கடவுள் மேல் நம்பிக்கை உண்டு, அதனாலேயே கடவுளின் அருளால் இந்த நிலையை பையன் அடைந்துள்ளான் என்று கூறினார்.

சொல்வதற்கு மறந்துவிட்டேன் சுந்தர் அவர்களும், ஒரு கிரிக்கெட் விளையாட்டு வீரர் தான் என்பதை. அதனாலேயே அவருடைய மகள் மற்றும் பையனுக்கு மட்டுமின்றி, ஒரு பயிற்சி மையத்தை அமைத்து பலருக்கு பயிற்சி கொடுத்து வந்தார் சுற்றியுள்ள சிறுவர்களுக்கு பயனுள்ள வகையில்.

தொடர்ந்து பேசினோம் வாசிங்டன் சுந்தர் பற்றி. பல நாள் தூக்கத்தை தொலைத்து இருப்பானே என்றேன். அதற்கு அவர் என்று தூங்கினான் என்று கூட எனக்கு தெரியாது. நானே தூங்கினாலும் நான்கு வயது இருக்கும் அவனுக்கு, அன்று விடியற்காலை 5 மணிக்கு எழுந்தவன் இன்று வரை அப்படி தான்.

பெரிய அளவில் பணம் சேமிப்பில் வைத்து இருக்கவில்லை சுந்தர் அவர்கள், பெரிய பின்புலமும் கிடையாது. இருந்தாலும் அவருக்கு வரும் சம்பளம் அல்லது வெளியில் இருந்து பெறும் தொகையின் ஒரு பகுதியை அவர் பயிற்சி மையத்தில் விளையாடும் பிள்ளைகளுக்கு மட்டை, பந்து, காலணி, கையுறை என வாங்குவதற்கு செலவழிப்பார்.

நான் கூறியது ஒன்றே ஒன்று தான் அது உங்கள் இருவரின் உழைப்பும், நீங்கள் சமூகத்திற்கு செய்ததன் பலனே இன்று வாசி (வாசிங்டன் சுந்தர்) இந்திய அணியில் விளையாட இவ்வளவு பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளது என்றேன்.

நீங்கள் அழைத்தது ரொம்ப மகிழ்ச்சியாக உள்ளது, அதுவும் நீண்ட நாட்களுக்கு பின் என்றார் சுந்தர்.

நீங்க சொன்ன நம்ப மாட்டீங்க என்னுடைய மகன் இந்திய அணியில் விளையாட மாட்டான், சிறந்த தந்தையாக வேண்டுமானால் நீங்கள் இருக்கலாம். ஆனால் சிறந்த

பயிற்சியாளராக இருக்க முடியாது என்றார் ஒருவர்.

நீங்க என்ன சொன்னீங்க என்றேன் நான்?

அவரோ, புன்னகையை பதிலாக அளித்துவிட்டு அங்கிருந்து வந்தேன். அன்று கூறியவர் இன்று நேரில் வாருங்கள் என்று அழைக்கிறார் என்றார் மகிழ்வுடன். ஒரு தந்தை தன்னுடைய பிள்ளையை வளர்ச்சியின் பாதையில் சரியாக கொண்டு சென்று, அவன் வெற்றி அடையும் பொழுது, அதன் மகிழ்ச்சியை உடன் பயணிக்கும் நம்முடன் அவர் பகிரும் பொழுது அதை கேட்க நான் சென்னையில் தற்பொழுது இல்லையே என்று நினைத்தேன்.

வாசியின் புகைப்படங்கள், காணொலிகளை இணையத்தில் பாருங்கள் நிறைய உள்ளது என்று ஆர்வமாக கூறினார். மாலை பார்க்கிறேன் என்று சொன்னாலும் உடனே பார்க்க தோன்றியது எனக்கு. பிறகுகென்ன மடிக்கணினியில் புகைப்படங்கள், இது வரை வாசி விளையாடிய விளையாட்டுகளின் சுவடுகளை தேடித் தேடிப் பார்த்தேன்.

அவன் சிறுவனாக இருக்கும் பொழுது பார்த்தது, இன்று அவனின் சுவடுகளை பார்க்கும் பொழுது எனக்குள்ளும் மகிழ்ச்சி ஆட்கொண்டது. முன்பை விட அதிகமாக.

தொடர்ந்து சுந்தர் அவர்களுடன் பேசி கொண்டு இருந்து, அவர் தன்னுடைய பிள்ளை பருவத்தை பகிர தொடங்கினார். 300 சதுர அடியில் 11 பேர் உறங்க வேண்டும் வீட்டில், இது சாத்தியமா என்று என்னிடம் கேட்டார். நான் அவர் சொல்லும் சூழலை உணர தொடங்கினேன். காரணம் எங்கள் வீட்டில் நான் 7 பேர் தாய், தந்தையுடன்.

என் சகோதரிகள் நான்கு பேரும் வீட்டினுள் படுத்துறங்குவார்கள். ஆனால் மற்ற அனைவரும் வீட்டிற்கு வெளியில் தான் உறங்குவோம். அப்படி தொடங்கிய பயணம் என்னுடையது என்றார். மனதுக்குள் ஒரு சோகம் என்னுள் தொற்றிக்கொண்டது அவரின் அன்றைய தின அனுபவங்களை பகிரும் பொழுது. நான் சென்னையில் இருந்த பொழுது கூட, அவர் இந்த அளவு என்னுடன் விவாதத்தித்தது கிடையாது. இன்று அவர் கூறும் பொழுது, அவர் எந்த மாதிரியான பாதைகளை கடந்து வந்து இருப்பார் என்று உணர முடிந்தது.

வாசியின் வெற்றிக்கு நீங்கள் தான் காரணம் என்றேன், அவரோ இல்லை, இல்லை அவனுக்கு இயல்பாகவே திறமை இருந்தது. அதை நான் உடன் இருந்து வழிகாட்டினேன் அவ்வளவு தான் என்றார்.


அதுவும் இளம் வயதில் இந்திய அணிக்காக விளையாட வேண்டும், அணி வீரர்கள் அணியும் நீல நிற உடையை தானும் ஒரு நாள் அணிய வேண்டும் என்பது அவன் கனவாக இருந்தது. கனவை, நனவாக்கினான் அவனுடைய தொடர் உழைப்பினால். படிப்பு, விளையாட்டு என்று இரண்டிலும் கவனம் செலுத்த சொல்லி பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்களும் பிள்ளைகள் தான் என்பதை உணர மறுத்து, இதனாலே பிள்ளைகளால் இரண்டிலும் மிளிர்வது சிரமமாக உள்ளது என்று ஊரில் உள்ள தற்போதைய நிலைய எடுத்துரைத்தார் எனக்கு.

நாங்கள் நீண்ட நேரம் பேசியும் இருவரும் சோர்வடையவில்லை, காரணம் மகிழ்ச்சியை பகிரும் பொழுது மகிழ்ச்சி இரட்டிப்பானால் எப்படி சோர்வடைவோம்.

இருந்தாலும் நிறைய உள்ளது அவனை பற்றி சொல்ல, நாம் மீண்டும் விவாதிப்போம் என்று கூறி விடைபெற்றார் சுந்தர்.

நன்றி!

- மன்னை மதி



- வெற்றிக்கொடி

# திருமணம்



மகாலெட்சுமி

தலைப்பு சற்று வித்தியாசமாக இருந்தாலும் விவரிக்கவும் விவாதிக்கவும் பல விடயங்கள் உள்ளன. இன்றைய காலக் கட்டங்களில் திருமணத்தை பற்றி நம்மிடையே இருக்கும் பொதுவான கருத்து சரியா? தவறா?

‘‘இருமனம் இணைவதே திருமணம்’’

ஒவ்வொரு தனிமனிதனும் சொந்த விருப்புவெறுப்புகளோடும், ஆசை, கணவு, இலட்சியத்தோடும் வாழ உரிமை கொண்டுள்ளான். ஆனால் ஒரு மனிதனின் திருமணத்தை அவன் தீர்மானிப்பதில்லை. மாறாக அவன் வாழும் சமூகமும், சொந்தங்களும், உற்றார் உறவினருமே தீர்மானிக்கிறார்கள். இவ்வாறாக மற்றவருக்காக செய்துகொள்ளப்படும் திருமணம் நீண்ட காலம் நிலைக்குமா?

உதாரணமாக, நம் சமூகத்தில் ஒரு ‘‘பெண்’’ பட்டதாரி ஆகிவிட்டாள் என்றால் அவள் திருமணம் செய்துகொள்ளும் நிலையை அடைந்துவிட்டாள் என்றே பொருளாகிவிட்டது. அதேபோல் ஒரு ஆண்மகன் நல்ல வேலையில் இருந்து, சிறிது நல்ல நிலை அடைந்ததும் திருமணதிற்கு தயாராகிவிட்டான் என கருதப்படுகிறது.

‘‘நிச்சயிக்கப்பட்ட திருமணமோ அல்லது காதல் திருமணமோ’’ எதுவாக இருப்பினும் இரு மனம் ஒன்றி அன்பை பரிமாற்றிய பின் நடைபெறும் திருமணமே நீடித்து நிலைக்கும். இன்றைய காலங்களில் திருமணம் என்பதோ வியாபாரம் போலாகிவிட்டது. பெண்ணின் அழகையும் படிப்பையும் மட்டும் அடிப்படையாக வைத்து ஆண் வீட்டாரும், ஆணின் வருமானத்தையும் குடும்ப பொருளாதாரத்தையும் மட்டும் அடிப்படையாக கொண்டு பெண் வீட்டாரும் வரன் தேடுகின்றனர். வெறும் பணத்தையும், அழகையும் கண்டு திருமணத்தை தீர்மானிப்பது தவறாகும். ஏனெனில் இரண்டுமே நிரந்தரமற்றவை. ‘‘குணமே’’ என்றும் சிறந்தது.

நிறத்தையும், பணத்தையும் பார்க்காமல் குணமுள்ள ஒருவரை அகமகிழ்ந்து மணம் புரிந்தால் ‘‘வாழ்வு செழிக்கும் வாழ்கை சிறக்கும்’’. ‘‘அன்பு’’ எனும் ஆயுதத்தை கொண்டு ‘‘திருமண பந்தம்’’ எனும் போர் தொடுப்போமானால் ‘‘சண்டை சச்சரவு’’ எனும் எதிரி வீழ்ந்து ‘‘காதல்’’ எனும் வெற்றி காலங்கடந்து நிலைக்கும்.

– மகாலெட்சுமி

# மன வாக்‘‘கேசரி’’



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

ரவா கேசரி கேள்விப்பட்டு இருப்போம்.சேமியா கேசரி கேள்விப்பட்டு இருப்போம். இது என்ன புதுசா இருக்கே !..

கேசரி செய்ய என்ன என்ன வேண்டும்?

ரவா, சர்க்கரை, பால் அல்லது தண்ணீர், வெப்பம். இவை நான்கும் சேரும் போது தான் கேசரி உருவாகும்.

இப்ப ஒரு கேள்வி?

கேசரி என்பது இனிப்பு தானே. அதனால் வெறும் சர்க்கரை மட்டுமே கேசரியை உருவாக்குமா?

அதெல்லாம் சரி... இப்ப எதுக்கு இதை போட்டு கிண்டிக்கிட்டு இருக்கீங்கன்னு கேட்கலாம். இருக்கு... காரணம் இருக்கு.

இது தேர்தல் காலம்.வெற்றி பெற்றவர்கள் பயன்படுத்தும் வார்த்தை ‘‘மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு’’.

தோல்வி அடைந்தவர் பயன்படுத்தும் வார்த்தை ‘‘ஜனநாயகத்தை பணநாயகம் வென்று விட்டது’’.

இது உண்மையா?

வெறும் பணம் மட்டுமே வெற்றியை தீர்மானிக்குமா?

இப்போது கேசரி செய்யும் முறை ஞாபகத்திற்கு வருகிறதா?

ஒரு வேட்பாளரின் வெற்றியை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

1. கட்சி
2. சாதி
3. நன் மதிப்பு
4. பணம்

இவை அனைத்தும் ஒரு வேட்பாளரிடம் ஒன்று இணையும் போது தான் வெற்றி என்னும் கேசரி கிடைக்கும்.

ஆனால் பணம் மட்டுமே வெற்றியை தீர்மானிக்கும் சக்தி என ஒரு பரப்புரையை திட்டமிட்டே ஊடகங்கள் மற்றும் தேர்தலில் தோல்வி அடைந்த கட்சிகள் பரப்பிக் கொண்டு அனைத்து மக்களையும் குற்றவாளிகளாக சித்தரித்து அதன் மூலம் தம்மை உத்தமர்களாக ஆக்கி கொள்கிறார்கள். இதை பற்றி விரிவாக பார்ப்போம்.
கடந்த 2016 தேர்தலைப் பார்ப்போம்.

தமிழ்நாடு மக்கள் தொகை 8 கோடி இருந்தாலும் வாக்கு உள்ளவர்கள் 5 முக்கால் கோடி பேர்தான். அதில் பொதுவாக வாக்கு அளிப்பவர்கள் 70 சதவீதம் மட்டுமே. அப்படி பார்க்கையில் 4 கோடியே முப்பது லட்சம் மட்டுமே பதிவான வாக்குகள்.

நம் தமிழகத்தில் வாக்கு வங்கி என்ற ஒரு அமைப்பு உள்ளது. அது ஒவ்வொரு கட்சிகளுக்கும் உண்டு.அவர்கள் எந்த காரணத்தை முன்னிட்டும் வேற கட்சிக்கு போட மாட்டார்கள்.அப்படி பார்க்கையில் அ தி மு க வே அதிகம்.

ஒன்றரை கோடி தொண்டர்கள் உள்ள பெரிய கட்சி அது. அதற்கு அடுத்தது தி மு க. சுமாராக ஒரு கோடி 20 லட்சம் தொண்டர்கள் உள்ள கட்சி. எனவே கூட்டணி இல்லாமல் தனித்து போட்டி இட்டால் அ தி மு கவே வெல்லும். இவ்விரண்டு கட்சி வாக்குகள் சேர்த்தால் 2.70 கோடி வாக்குகள் நிரந்தர வாக்குகள். பின் மற்ற கட்சிகள் வாங்கிய ஓட்டுகள் ஏறக்குறைய 90 லட்சம் வாக்குகள்.

மீதம் உள்ள 50 லட்சம் பேர்தான் பணத்திற்காக தங்கள் வாக்குகளை விற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் அ தி மு க, தி மு க போன்ற கட்சிகளுக்கு விற்று இருக்கிறார்கள். ஏன் எனில் பெரும்பாலும் பணம் கொடுத்தவர்கள் அந்த இரண்டு கட்சிகள் மட்டுமே. அதில் அதிக பணம் கொடுத்தவர் கட்சிக்கு அதிக வாக்குகள் போய் இருக்கின்றன.

இது தான் உண்மை. வெறும் 50 லட்சம் பேர் என்பது மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதத்திற்கும் குறைவு. அப்படி இருக்க மீதம் உள்ள 90 சதவீதம் பேர் மேல் ஏன் இந்த தவறான குற்ற சாட்டை விதிக்கிறீர்கள். இது ஒரு மோசமான கருத்தாக்கம். உண்மை இப்படி இருக்க வெறும் பணம் மட்டுமே வெற்றியை தீர்மானிக்கும் என்பது எப்படி சரியான கருத்தியலாக இருக்கக்கூடும்?

அதற்காக வாக்கு அளிக்க பணம் வாங்குவதையும் கொடுப்பதையும் ஒரு போதும் ஆதரிக்க முடியாது.

ஓட்டிற்கு பணம் கொடுப்பவன் பாவி. பணம் வாங்கி கொண்டு வாக்கை அழி(ளி)ப்பவர்கள் துரோகிகள்.

துரோகிகளே பாவ செயல் வேண்டாம்.

உங்கள் வறுமையே அவர்கள் மூலதனம். நீங்கள் நோட்டிற்காக ஓட்டை விற்கின்றீர்கள். அவர்கள் ஓட்டிற்காக நாட்டை விற்கின்றார்கள்.

அதற்காக மக்களின் வறுமையை இயலாமையை கொச்சைப்படுத்த முடியாது. நீங்கள் அனைத்து கட்சிகளிடம் இருந்து வாக்கு அளிக்க பணம் பெறுங்கள். அது உங்கள் வரிப்பணம். உங்கள் சொத்து.

அதன் மூலம் உங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளுங்கள். ஆனால் எந்த கட்சி நேர்மையாக தேர்தலை அணுகுகிறதோ அந்த கட்சிக்கு உங்கள் மேன்மையான வாக்குகளை செலுத்துங்கள். இப்படி செய்வது துரோகம் அல்ல.

இது தான் நியாயம். இப்படி ஒருமுறை நீங்கள் செய்து விட்டால், இனி எந்த கட்சியும் வாக்கிற்கு பணம் தர முன் வரமாட்டார்கள்.

போட்ட முதல் திரும்ப கைக்கு வரவில்லை என்றால் எந்த வியாபாரி அந்த தொழிலை செய்ய விரும்புவான்?

ஆகவே பணத்திற்காக செலுத்தும் வாக்கு சரி அல்ல.
உங்கள் மன சாட்சி படி அளிக்கும் உங்கள் மன வாக்கே ‘சரி’.
இப்போது மீண்டும் தலைப்பை படியுங்கள். சரிதானே!!

**- செந்தில் பக்கிரிசாமி**

உன் உழைப்பினை உயர்த்த
உன் திறமையை வெளிக்கொள்
பிறர் குறையினை சுட்டிக்காட்டுவதனால்
உன் உயர்வு நிலைக்காது.

அது மீண்டும்
உன்னை வந்தடைந்து இறக்கத்தில் தள்ளும்

**அ. மணிமொழி,** MBA
திருராமேசுவரம்

# எதிர் நோக்கி காத்திருந்தேன் காணவில்லை

காலைக்கதிரவன் தினமும் வரும் வேலை
எதிர் நோக்கி காத்திருந்தேன் காணவில்லை!

மேகமூட்டங்களை கண்டு மழை தான்
வரப் போகிறது என்று இரு கைகள் ஏந்தி
நின்றேன் காணவில்லை!

குளக்கரையில் தாமரையை கொய்து வந்து
இறைவனுக்கு சூடிட சென்றேன்
குளம் இருந்த சுவடுதனை காணவில்லை!

கல்வி பயில பாடசாலைக்கு சென்றேன்
அங்கே நான் அறிந்த தமிழ் மொழியை காணவில்லை!

தோட்டத்தில் உள்ள செடி கொடிகளை பார்க்க சென்றேன்
மண் கூட இராசயனமாகி அதன் உயிரைக் காணவில்லை!

விளையாடச் செல்ல எத்தனித்து
உடன்பிறப்புகளை தேடினேன்
கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காணவில்லை!

தந்தையோடு உரையாடி நல்லவை கெட்டவை அறிய நினைத்தேன்
எட்டா தொலைத் தூரத்தில் அலைப்பேசி அழைப்பில்
உரையாடல் காணவில்லை!

தாயின் மடியில் உறங்க நினைத்தேன்
வாழ்க்கைப் பயணத்தில்
விடுதியில் தாயை காணவில்லை!

உயிர் நட்பிடம் தோள் சாய சென்றேன்
அவள் உறவுகளிடத்தில் உறைந்து போய் அவள் இருக்க
தலைசாய தோழமையை காணவில்லை!

புத்தகங்களோடு பேசி சமூக சிந்தனையோடு வெளியேறி
சமூகமாற்றத்திற்காய் பயணித்தால்
பெண்ணுக்கான அங்கீகாரத்தை காணவில்லை!

நம்மிடம் பேசுபவரிடத்தில்
உள் அன்போடு பழகினால்
பணத்தேவைகளை பூர்த்தி செய்துக் கொண்டு
பழகிய பாவத்திற்க்கு நம் நடத்தையும் குறைகூறி
அவர்கள் இருந்த இடம் காணவில்லை!

விழிகளில் வழியும் கண்ணீரை துடைத்தெறிந்து
நம்பிக்கையோடு பயணத்தை தொடர நினைத்தால்
வழியில் கிடக்கும் கற்கள் எல்லாம் இடைமறித்து
கேள்விக் கேட்க போகும் வழியை காணவில்லை!

உயிர் பிறக்க, இறக்க
இடையில் சுக துக்கத்திற்கும்
ஊடலுக்கும், கூடலுக்கும்
எல்லாவற்றிக்கும் பெண் தேவைப்பட
அவள் எண்ணங்களுக்கும் தன்மானத்திற்க்கும்
இங்கு உரிமைகளை காணவில்லை!

இப்படிக்கு
**கண்ணம்மா**
உள்ளிக்கோட்டை

“ உதவி
என்ற வார்த்தைக்கு
அர்த்தம் தெரியாத
நீயும் அறிவாய்
உனது ஆபத்து நிலையில் ”

**V. வினோதா**
சேமங்கலம்
திருவிக கல்லூரி

# கர்மவீரர்!

நீங்கள் எங்களுக்குக் கொடுத்தீர்கள் படிப்பு...

என்றென்றும் நாங்கள்
உங்களுக்குக் கொடுப்போம் மதிப்பு...

நீங்கள் படிக்காத மாமேதை....
உங்களை எதிர்த்தோர் யாவரும் பேதை....

கல்வியையும் எங்களுக்களித்து
நீங்கள் எங்கள் வயிற்றை நிரப்பினீர்கள்.....

காலம்தோறும் உங்கள் வழியைக் கடைபிடித்து
நாங்கள் உங்கள் மனதை நிரப்புவோம்.....

C.தேஜா கிருஷ்ணா,
8ம் வகுப்பு,
சண்முகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
மன்னார்குடி.

# இது போதும்...

உன் விழியாய் இருக்க நான் விரும்பவில்லை..
உன் விழியில் படும் ஓர் துரும்பாய் இருந்தால் போதும்...!

உன் விரலாய் இருக்க நான் விரும்பவில்லை
உன் விரல்கள் தொடும் ஓர் மணலாய் இருந்தால் போதும்...!

உன் இதழாய் இருக்க நான் விரும்பவில்லை
உன் இதழைத் தீண்டும் துளி நீராய் இருந்தால் போதும்....!

உன் உடலாய் இருக்க நான் விரும்பவில்லை
தரையில் விழும் உன் உடலின் நிழலாய் இருந்தால் போதும்...!

க. உதயநிதி
இளங்கலை ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு,
மன்னை இராசகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரி.

# விபத்தும் நானும்

இனிமையான ஒவ்வொரு பயணமும்
நன்றாகவே ஆரம்பமாகும்
முடிவும் நன்மையாகவே முடியும்
என்ற நம்பிக்கையில்...

சாலைகளில் கண்டேன் - உன்
உயிரற்ற உடைந்த பாகங்களை
உன்னை தாண்டியப்பின் கண்டேன் - நீ
அவசரமாய் நிறுத்திய
வண்டியின் அச்சுகளை
அவைகள் சொல்கின்றன - உன்
கண்ணீர் கதையை

நீ யாரென்றே தெரியாதே - எனக்கே
என்னுயிர் சிதறி போனதே
உன்னை நினைத்து காத்திருந்த
பல உறவுகளின் கதறல்களுக்கு
என்ன சொல்லப் போகிறாய்

உன்னைப் போன்ற பல உயிரற்ற
உடலை மாதம் ஒருமுறை
சுமந்துக் கொண்டுதான் இருக்கின்றன

தஞ்சை வழி மன்னை சாலைகள்

உறவுகளிடம் நினைவுகளாக
சாலையை கடப்போரின் கண்ணீராக

- இலக்கியா இளவரசன் M.C.A.,



ராஜேஷ்
மன்னை

# காவிரி

என்னை தாய்
என்று அழைக்க
தவறாத தமிழா ...

உண்மையில் அன்னையின்
அர்த்தம் தெரியுமா உனக்கு??


உன் காலடியில் கலந்தோடிய
தண்ணீரில் என் கண்ணீரும்
கலந்திருந்ததை அறியாயோ!!!
நான் இருப்பது
தடுப்பணையில் இல்லை.
தடுப்பு சிறையில்....

என்னை நீ
சிறைக் கொடுத்த நாள்முதல்
உன் பெருமை
சீர்கெட்டு போனதை
அறிவாயா....

என்னை சிறைமீட்டு
உன் புகழை நிலைநாட்டு.

மகன் வருவான் மானம்காப்பான்
என்ற நம்பிக்கையில்


உன் தாய்
காவிரி....



சா. அறிவுமணி ராஜகுரு, M.Sc.

A. சுபா
மன்னார்குடி





திருமதி. **சியாமளா தேவி**
மன்னார்குடி



**ஆ. மணிமொழி**
திருராமேசுவரம்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322** http://maintharkal.mannai.in

# இனிய பொங்கல்,
# தமிழ் புத்தாண்டு
# தின நல்வாழ்த்துகள்





http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்